பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 26 வியாழக்கிழமை 11.09.2025 கதிர் 305

## இது ரகசியம் அல்ல!

நேற்று நாடாளுமன்றத்தில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அரசுத் தலைவர் அநுரகுமாரவை அவரது அலுவலகத்தில் சந்தித்து சுமார் ☞2

# புலிகளால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் குருக்கள் மடம் புதைகுழி தோண்டப்படும்

### ஒக்டோபரில் பணி தொடக்கம் என்கிறார் நீதி அமைச்சர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள் மடம் கிராமத்தில் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க ஆளும்தரப்பு உரிய நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அதற்கான அகழ்வு நடவடிக்கைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் தொடங்கும். தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவிஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி, தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ☞7

# முன்னாள் அரசுத் தலைவர்கள் நாட்டு நலனுக்கு செய்ததென்ன?

### மக்கள் வரிப் பணத்தில் இவர்களை பராமரிப்பது நியாயமா? அமைச்சர் ஹர்ஷன

உலக நாடுகளில் அரசுத் தலைவர்கள் சேவையில் இருந்து ஒய்வுப் பெற்றதன் பின்னர் அவர்கள் நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடுகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். அதற்காகவே அவர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன். இலங்கையில் அவ்வாறான நிலை உள்ளதா? முன்னாள் அரசுத் தலைவர்கள் தமது மகன்களுக்கு அரச ☞6

# முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துகள் நேற்று முதல் நீக்கம்

### நிறைவேற்றப்பட்ட அன்றே சட்டத்தைச் சான்றுப்படுத்தினார் சபாநாயகர்

அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. நந்-ப் பிற்பகலே சபாநாயகர் சட்டத்தைச் சான்றுப்படுத்தினார் இச்சட்டமூலத்திற்கு எதிர்கட்சிபக்கத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க எதராகவும் சுயேச்சை நாடாளுமன் உறுப்பினர் அருச்சுனா ஆதரவாகவும் வாக்களித்தனர்

நாடாளுமன்றத்தில் நேற்று அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதம் காலை 11 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இடம்பெற்றது. இதனையடுத்து சட்டமூலத்தை நிறைவேற்ற சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க வாக்கெடுப்பைக் கோரினார்

அதனையடுத்து வாக்கெடுப்புக்கான "கோரம்" மணி ஒலித்த நிலையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறிசென்றனர். ஆனால் எதிர்க்கட்சியின் புதிய ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான சாமர சம்பத் தசநாயக்கவும் சுயேச்சைக்குழு 17 இன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அருச்சுனாவும் ☞2

# பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிப்பு

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற முன்னுதாரணங்களுக்கு முரணான ஒரு விரும்பத்தகாத முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். அனைத்து விடயங்களையும் கருத்தில்கொண்டு, பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் ஒழுங்கற்றது மற்றும் அதனை தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

சபாநாயகரின் இந்த அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய எதிர்க்கட்சி தலைவர், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் அலுவலக சபை முன்வைத்த அறிக்கையை சபைக்கு அளிக்கைசெய்யுமாறு வலியுறுத்தினார்.

சபாநாயகர் நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தையும் எதிர்க்கட்சிகளின் உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும். முறையற்ற வகையில் செயற்பட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முடியும் என்று ஐக்கிய மக்களின் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நோக்கி குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அமர்வு தொடங்கியபோது ☞2

# இது ஒரு பழிவாங்கலல்ல அரசியல் கலாசார மாற்றம்

### அமைச்சர் ஆனந்த விஜேபால விளக்கம்

முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை நீக்க எடுத்த நடவடிக்கை அரசியல் கலாசாரத்தின் மாற்றமே தவிர பழிவாங்குதல் அல்ல. இதனால் யாருக்காவது பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்பட்டால் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட குழுவுக்கு தெரிவித்து தேவையான பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றுவது எவர் மீதான பழிவாங்கலும் அல்ல. அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக நாட்டு மக்களுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை வேலைத் திட்டத்திற்கு இணங்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் ஒரு ☞6

### போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும்

# வலி. வடக்கில் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்படுவது ஏன்?

### சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

நாட்டில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள பின்னரும், வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? புதிய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், ☞6

# நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிப்பூடாக எதையோ மறைக்க முயல்கிறது ஆளும்தரப்பு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்தால், அதனை தோற்கடிக்க ஆளும்தரப்பிடம் பெரும்பான்மை இருந்தும், இதனை நிராகத்ததன் மூலம் ஆளும்தரப்பு இதில் எதனையோ மறைக்க முற்படுகிறது. அதேநேரம் இது விவாதிக்கப்பட்டால் பல விடயங்கள் மக்கள் மயமாக்கப்படும் என்ற அச்சமே ☞6

# யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாமலிருக்கும் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### வீடமைப்புத்துறை அமைச்சர் உத்தரவாதம்

பல்வேறு காரணிகளால் இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்தக் காணிகளிலேயே மீள் குடியேற்ற வேண்டும் என்ற கொள்கைகளுடனேயே ஆளும்தரப்பு செயற்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளை முறையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அரை மணி நேரம் நேரில் உரையாடியுள்ளார். தற்போதைய அரசியல் நிலை குறித்து இருவரும் தனிப்பட்ட ரீதியில் உரையாடியுள்ளனர்.

இந்த உரையாடல் மாகாண சபைத் தேர்தல், இந்திய நிதி உதவியில் மேற்கொள்ளப்பட இருந்த காங்கேசன்துறை முக அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள தாமதம், தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரான சுமந்திரனைக் குறிவைத்து ஆளும்தரப்பினர் குறிப்பாக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவும் வேறு சிலரும் மேற்கொள்ளும் மிக மோசமான பரப்புரை, வடக்கு கிழக்கிற்கான தனியான அபிவிருத்தி நிதியம், நேற்று நிறைவேற்றப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் சட்டம் ஆகிய விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து ஆளும் தரப்பு தமிழ் அரசுக் கட்சியையும் குறிப்பாக அதன் செயலாளர் சுமந்திரனையும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் ஆளும்தரப்புப் பெற்ற ஆதரவைத் தட்டிப் பறிந்து அதனை இரண்டாம் இடத்திற்குத் தள்ளியமை மற்றும் இலங்கை முழுவதும் ஆளும்தரப்புக்கு அடுத்தபடியாக அதிகளவான உள்ளூராட்சி சபைகளைக் கொண்ட கட்சியாக, ஒரு பலமான எதிர்த்தரப்பாக தமிழ் அரசுக் கட்சி எழுச்சி பெற்றமை ஆகியவற்றை அடுத்து ஆளும் தரப்பினர் அதனையும் சுமந்திரனையும் இலக்கு வைத்துத் தாக்கத் தொடங்கினார்கள். அதிலும் சுமந்திரன் மற்றும் சாணக்கியனை இனவாதிகள் என்று சபை முதல்வர் பிமல் ரத்தநாயக்க முதல் பலரும் நேரடியாகவே தாக்கினார்கள். வடக்கிலும் தெற்கிலும் மீண்டும் இனவாதம் தலைதூக்குகிறது என்றும் வடக்கில் இனவாதத்தை இவர்களே விதைக்கிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்கள்.

இவை பற்றி சாணக்கியன் அரசுத் தலைவரிடம் நேரடியாகச் சுட்டிக்காட்டினார். தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக ஆளும்தரப்பும் சபை முதல்வரும் இப்படிக் கடுமையாகச் செயற்பட்டுக்கொண்டு தமிழர்களுக்கான தீர்வு விடயத்திலும் புதிய அரசமைப்பு விடயத்திலும் கட்சியின் ஒத்துழைப்பை எப்படி எதிர்பாரக்க முடியும் என்கிற வகையில் சாணக்கியன் கேள்வி எழுப்பினார். அதற்கு விரைவில் பல மாற்றங்கள் வரும் என்றும் அப்போது இதுபோன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்கிற வகையிலும் அநுர ஆறுதல் கூறினார்.

ஆனால், தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தி, அதன் செயலாளரான சுமந்திரனை அகற்றச் செயற்படுவது என்பது அரசுத் தலைவர் தேர்தல் காலத்திலேயே என்பிபி மற்றும் ஜேவிபி தரப்புக்களுக்குள் எடுக்கப்பட்டுவிட்ட முடிவு என்பதால் அரசுத் தலைவர் தெரிவிப்பது போன்று எந்தவித மாற்றங்களும் நிகழப்போவதில்லை. சுமந்திரனை அகற்றும் திட்டத்திற்கு தமிழ் அரசியல்வாதிகளுடனேயே அவர்கள் 'டீல்' முடித்திருக்கிறார்கள் என்றும் தகவல்கள் கசியும் நிலையில், பிமல் ரத்நாயக்கவோ ஜேவிபியினரோ தமிழ் அரசு மற்றும் சுமந்திரனுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அரசுத் தலைவரின் சமாளிப்புக்கள் எல்லாம் ஜெனிவாக் கண்டம் கடக்கும் வரைக்குமானதுதான்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து சாணக்கியன் சுட்டிக்காட்டியபோது அடுத்த ஆண்டு தேர்தல் நடத்தப்படும் என்று அரசுத் தலைவர் தெரிவித்திருக்கிறார். ஆனால், புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைகளின் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னரே தேர்தல் என்று ஆளும்தரப்புக்குள்ளும் ஜேவிபிக்குள்ளும் பேசப்படுவது குறித்துச் சுட்டிக்காட்டிய சாணக்கியன், அப்படி எல்லை நிர்ணயப் பணி முடித்துத் தேர்தல் என்றால் அது இப்போதைக்குச் சாத்தியமான பணி இல்லையே என்கிற கேள்வியையும் எழுப்பியுள்ளார். அதற்கு ஆளும்தரப்பினர் பொதுப்படையாகப் பேசுகின்றனரே தவிர, அது தொடர்பில் எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்றும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்றும் அரசுத் தலைவர் பதிலளித்துள்ளார்.

காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா மானியமாக உதவி வழங்க முன்வந்தபோதும், அந்தத் துறைமுகத்தால் எதிர்காலத்தில் போதிய வருமானத்தை ஈட்ட முடியாது என்று தெரிவித்து அதனைப் புறக்கணிப்பதில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தீவிரமாக இருக்கின்றார் என்றும் இது இந்தியத் தரப்புக்களுக்கு அதிருப்பதியை ஏற்படுத்துகின்றது என்றும் சாணக்கியன் சுட்டிக்காட்டினார். அதற்கு அப்படி இந்தியாவுடன் இராஜதந்திர பிணக்குகள் ஏற்படும் விதத்தில் தமது ஆளும்தரப்பு நடந்துகொள்ளாது என்று அரசுத் தலைவர் தெரிவித்திருக்கிறார். இந்தியாவை அனுசரித்து நடப்பதே தமது தரப்புக் கொள்கை என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதியம் ஒன்றைத் தொடங்குவது குறித்த கதையாடல்கள் இடைநடுவில் நின்றது குறித்துச் சாணக்கியன் சுட்டிக்காட்டியபோது, அதனைத் தான் மறந்துபோய்விட்டார் என்றும் உடனடியாக அந்த வேலைகளை மீண்டும் தொடங்கலாம் என்றும் பதிலளித்துள்ளார் அரசுத் தலைவர்.

நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர்கள் உரித்துரிமைகள் சட்டத்தை ஆளும் தரப்பு உடனடியாக நடைமுறைப்படுத்துமா என்பது தொடர்பில் சாணக்கியன் கேள்வி எழுப்பியதற்கு, சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால் முன்னாள் அரசுத் தலைவர்கள் அதனை மதித்து நடப்பார்கள் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும், உடனடியாக அவர்களின் உரித்துரிமைகளைப் பறித்துத் துரத்துவது தமது ஆளும்தரப்பின் நோக்கமல்ல என்றும் கூறியுள்ளார்.

இதற்கிடையே அவர் கூறியபடியே, சட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டு அன்றே சபாநாயகரால் கையெழுத்திடப்பட்டு சான்றுப்படுத்தியை அடுத்து, அரசால் ஓய்வுக் காலத்தில் தனக்கு வழங்கப்பட்ட வீட்டை விட்டு உடனடியாக இன்றே வெளியேறும் முடிவை மகிந்த ராஜபக்ச எடுத்துள்ளார் என்றும் தங்காலையில் அவருக்கு இன்று பெரும் வரவேற்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் அமர்ந்திருந்தனர்.

இந்நிலையில் இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன. இதில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அர்ச்சுனா இராமநாதன் வாக்களித்தார். சாமர சம்பத் தசநாயக்க எதிராக வாக்களித்தார். இதன் அடிப்படையில் சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்தற்கான சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் 31 அன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் பணிப்புக்கமைய இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது.

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்யும் பொருட்டு இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்து சட்டம் இந்த சட்டமூலத்தின் ஊடாக இரத்துச் செய்யப்படும்.

இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னாள் அரசுத் தலைவர்கள் அல்லது முன்னாள் அரசுத் தலைவர்களின் விதவையான மனைவியருக்கு வழங்கப்படும் ஏதேனும் வீடு அல்லது செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு,

இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னாள் அரசுத் தலைவர்கள் அல்லது முன்னாள் அரசுத் தலைவர்களின் விதவையான மனைவியருக்கு செலுத்தப்படும் செயலாளருக்கான மாதாந்த கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் வேறு சகல வசதிகள்

இரத்துச் செய்யப்படும் சட்டத்தின் 4ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய முன்னாள் அரசுத் தலைவர்கள் அல்லது முன்னாள் அரசுத் தலைவர்களின் விதவையான மனைவியருக்கு செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு என்பன நிறுத்தப்படும்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நேற்றே சட்டத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நேற்று முதல் நடைமுறைக்குவந்தது.

## பாதுகாப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தனது அறிவிப்பை விடுத்தார்.

12.08.2025 அன்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) அருண ஜெயசேகரவுக்கு எதிராக, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களால் அளிக்கை செய்யப்பட்ட 'நம்பிக்கையில்லாத் பிரேரணை தொடர்பாக, 19.08.2025 அன்று சபைக்கு வெளியிட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக இந்த அறிவிப்பை விடுக்கிறேன்.

அரசமைப்பின் விதிகள், நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் முன்னுதாரணங்களின் அடிப்படையில், இந்தப் பிரேரணையை நான் கவனமாகப் பரிசீலித்துள்ளேன். இந்தியாவின் மக்களவை மற்றும் ஆஸ்திரேலியாவின் பிரதிநிதிகள் சபை போன்ற பிற பொதுநலவாய மற்றும் ஜனநாயக சட்டங்களில் இது தொடர்பாகப் பின்பற்றப்படும் மரபுகள் மற்றும் நடைமுறைகளையும் ஆய்வு செய்தேன்.

ஆளும்தரப்பிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டுவரப்படலாம் என்பதை அரசமைப்பு தெளிவாக அங்கீகரிக்கிறது. அதேநேரத்தில் பிரதமர் அல்லது ஒரு தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானங்களை முன்னுதாரணமாக அங்கீகரிக்கிறது. ஆனால் பிரதி அமைச்சருக்கு எதிராக அத்தகைய தீர்மானத்திற்கு எந்த ஏற்பாடும் இல்லை. எனவே, இன்று அத்தகைய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற முன்னுதாரணங்களுக்கு முரணான ஒரு விரும்பத்தகாத முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். அதன்படி, இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில்கொண்டு, பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒழுங்கற்றது மற்றும் அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ளமுடியாதது என்பதை இந்த சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். என்றார்.

.இதன்போது ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக, நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து தங்களிடம் வினவியபோது இவ்விடயம் தொடர்பில் சபையின் செயலாளரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டீர்கள். அதேபோல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இந்த பிரேரணை இடையூறாக அமையுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியுள்ளதாகக் குறிப்பிட்டீர்கள். தங்களுக்கு இவ்விரு தரப்பில் இருந்தும் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அரசியலில் ஈடுபடும் தரப்பினர்கள் சகலருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரமுடியும். இவ்விரு அறிக்கைகளின் உள்ளடக்கம் எமக்குத் தெரியாது. இந்த நம்பிக்கையில்லா பிரேரணையால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை, சட்ட சிக்கல் இல்லை என்று சட்டமா அதிபர் தங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று அறிய முடிகிறது. அத்துடன் சபையின் செயலாளரது அறிக்கையின் உள்ளடக்கம் என்னவென்பதும் எமக்கு தெரியாது .ஆகவே இவ்விரு அறிக்கைகளையும் சபைக்கு அளிக்கை செய்யுங்கள் என்று வலியுறுத்துகிறேன் என்றார்

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை, கோட்பாடுகள் மற்றும் மரபுவழி தீர்மானங்கள் உட்பட சர்வதேச நாடாளுமன்ற ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. சட்டமா அதிபரின் அறிக்கை, செயலாளர் சபையின் அறிக்கையை சபைக்கு அளிக்கை செய்வது தொடர்பில் பரிசீலிக்கிறேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இவ்விடயம் தொடர்பில் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வாய்ப்பளியுங்கள். பிரதி அமைச்சர் என்பவர் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி. ஆகவே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரமுடியும். சட்டமா அதிபர் வழங்கிய அறிக்கையை நாங்கள் ஆராய வேண்டும், ஆகவே அதனை சபைக்கு அளிக்கை செய்யுங்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, ஏதேனும் விடயம் தொடர்பில் சபாநாயகர் சபைக்கு அறிவித்ததன் பின்னர் அதனை விவாதிக்க முடியாது. நாடாளுமன்ற நிலையியல் கட்டளையில் அவ்வாறு ஏதும் குறிப்பிடப்படவில்லை. இந்தப் பிரேரணை தொடர்பில் எச்சந்தர்ப்பத்திலும் விவாதிக்க ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாங்கள் தயாராகவே உள்ளோம். இருப்பினும் இது நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கும், அரசமைப்புக்கும் இணக்கமானதா என்பதை ஆராயும் பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு. இந்தப் பிரேரணையை எதிர்கட்சியினர் பிறிதொரு வடிவில் கொண்டுவருவார்களாயின் எமக்கு எவ்வித பிரச்சினையுமில்லை.

நாடாளுமன்றத்துக்கு ஒரு பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் உண்டு. முறையான வழியில் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுப்போம். இந்தப் பிரேரணைக்கு இடமளிக்காவிடின் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதாக ரஞ்சித் மத்தும பண்டார அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இதுவா ஜனநாயகம்? சபாநாயகரை பதவிநீக்க இவர்களால் முடியாது. எதிர்க்கட்சியின் தலைவரின் நிலைப்பாடு இதுவா? சபாநாயகரை அச்சுறுத்துவது முறையா? நாடாளுமன்ற கோட்பாட்டுக்கு அமைவாக அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வாருங்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசுத் தலைவர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர், எவ்விதான முழுமையான முன்னறிவித்தலுமில்லாமல் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளமை முற்றிலும் தவறானது என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தாங்கள் (சபாநாயகர்) நாடாளுமன்றத்தினதும், எதிர்க்கட்சிகளினதும் ஜனநாயகம் மற்றும் உரிமைகளை பாதுகாக்காவிடின் உங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர நேரிடும். நாடாளுமன்ற வரலாற்றில் முதன் முறையாகவே நம்பிக்கையில்லா பிரேரணையொன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 1978ஆம ஆண்டு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே ஒருதலைப்பட்சமாக செயற்படாதீர்கள் என்றார்.

சபாநாயகரின் அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

## யாழ்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறீதரனால் வலிகாமம் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் 2010ஆம் ஆண்டில் 12,376 குடும்பங்களை நேர்ந்த 42,699 பேர் இடம்பெயர்ந்தவர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 10,981 குடும்பங்களை சேர்ந்த 38693பேர் மீள் குடியேற்றப்பட்டிருந்தனர். எனினும் 1,395 குடும்பங்களை சேர்ந்த 4,006 பேர் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றனர். இதேவேளை 2009 காலத்தில் 23,850 ஏக்கர் காணி முப்படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவற்றில் பெரும்பாலான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 2,583 ஏக்கர் பகுதி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்ற கொள்கையிலேயே ஆளும்தரப்பு செயற்படுகின்றது. இதன்படி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊடாக அந்த காணிகளை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் போன்ற தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமான இடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளிலும் ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது. அங்கு மூடப்பட்டிருந்த வீதிகளும் திறக்கப்பட்டுள்ளன.

இந்த ஆளும்தரப்பு வடக்கு மக்களுக்காக வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பெருமளவு நிதிகளை ஒதுக்கியுள்ளது. அங்கு பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# குருக்கள் மடத்தில் இறந்தோரின் சடலங்களை தோண்டி எடுத்து நல்லடக்கம் செய்யவேண்டும்

## ஹிஸ்புல்லா எம்.பி. ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

மட்டக்களப்பு குருக்கல் மடம் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீள தோண்டி எடுத்து, அந்தச் சடலங்களை இஸ்லாமிய மத முறைப்படி நல்லடக்கம் செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1990 ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் குருக்கள் மடம் கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் சிலர் மக்கா யாத்திரைக்கு பின்னர் கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதியில் தங்களின் வீடுகளுக்கு வாகனத்தில் திரும்பும்போது அங்கிருந்த சிறுவர்கள், முதயோர்கள் இளைஞர்கள் என அனைவரையும் விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று படுகொலைசெய்துள்ளனர்.

அது தொடர்பில் அவர்களின் உறவினர் ஒருவரினால் களுவாஞ்சிக்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. குறித்த முறைப்பாட்டுக்கமைய களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குதாக்கல்செய்யப்பட்டது. அதன்போதுவழக்குவிசாரணைகளின் பின்னர் புதைக்கப்பட்ட அனைத்து சடலங்களையும்தோண்டிஎடுத்து, சர்வதேச நியதிகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அந்த பிரதேசத்தை முற்றாக பாதுகாப்பாக வைக்குமாறும் இந்த நடவடிக்கைகளை காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஊடாக மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த சம்பவத்தின்போது 170 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. எனவே நிதிமன்ற உத்திரவின் பிரகாரம் இந்த விசாரணைகளை விரைவுபடுத்துவதற்கு காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்குமா?

இந்த நடவடிக்கையை நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா?

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடம் தேவையான உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா? இங்கு மரணித்தவர்களின் சடலங்களை தோண்டி எடுத்த பின்னர், அவற்றை இஸ்லாமிய மத முறைப்படி நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா என கேட்கிறேன் என்றார்.

# நேபாளத்தின் நிலை தொடர்பில் கவலைப்பட்டு ரணில் அறிக்கை

நேபாளத்தில் நீண்ட காலமாக காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்தவில்லை. தெற்காசிய பாரம்பரியத்தின்படி, கடுமையான பிரச்சனைகளுக்குதீர்வு காணாமல், அனைவரும் அன்றாட அரசியலில் கவனம் செலுத்தியமையே இளைஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆளும்தரப்பின்திறமையின்மையே நேபாளத்தின் அழிவுக்கு காரணமாகியுள்ளது என முன்னாள் அரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டு முன்னாள் அரசுத் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேபாளம் - காத்மண்டுவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. முதலில் நேபாளத்தில்மேற்கொள்ளப்பட்டுள்ள இளைஞர்கள் மீதான தாக்குதல் உள்ளிட்ட அனைத்து வகையான கொலைகளையும் நான் கண்டிக்கிறேன்.

அதேபோல், முன்னாள் பிரதமரின் வீடு எரிக்கப்பட்டதும், முன்னாள் பிரதமரின் மனைவி கொல்லப்பட்டதும் மிகவும் சோகமான சூழ்நிலைகளாகும். அந்தப் படுகொலைக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அமைச்சர்கள், குறிப்பாக அயலுறவுத்துறை அமைச்சர் மீதான தாக்குதல்கள், நேர்ந்த துயரத்தின் மேலும் ஒரு நீட்சியாகும். பெண்களின் உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளன. இத்தகைய செயல்கள் நேபாளத்தின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

காத்மண்டுவில் நிலமை இவ்வளவு தூரம் சென்றிருக்கக்கூடாது. பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும். முதல் நாளிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தாமல் ஏற்பட்ட சூழ்நிலையை கட்டுப்படுத்தியிருக்க முடியும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சம்பவங்களுக்கான சாத்தியமும் ஒரு ஆபத்தான சூழ்நிலையாகும். கூகுள், பேஸ்புக் மற்றும் யூடியூப் போன்ற அமெரிக்காவிற்கு சொந்தமான சமூக ஊடக நிறுவனங்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் ஆளும்தரப்புக்களைக்கவிழ்ப்பதற்கு அளித்துள்ள வாய்ப்பை குறைத்து மதிப்பிட முடியாது.

நேபாளம் நீண்ட காலமாகப் பல பிரச்சினைகளைக் கொண்டிருந்தது. ஆளும்தரப்பு அவை தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. தெற்காசிய பாரம்பரியத்தின்படி, கடுமையானபிரச்சனைகளுக்குதீர்வு காணாமல், அனைவரும் அன்றாட அரசியலில் கவனம் செலுத்தினர். இது இளைஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில், சமூக ஊடகங்களை முழுமையாகத் தடை செய்ததால் நெருக்கடி மேலும் வெடித்தது.

நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்ற கட்டடங்கள் நாட்டின் ஜனநாயக நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன, மேலும் அவை அவற்றினுள் இருப்பவர்களால் வரையறுக்கப்படுவதில்லை. நாடாளுமன்றத்தையும் நீதிமன்றத்தையும் எரிப்பது நேபாளத்தின்ஜனநாயகத்திற்குபெரிய அவமானமாகும். எவ்வாறாயினும் இறுதியில் அரசமைப்பு இல்லாத ஒரு நேபாளமே எஞ்சியுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவத்தின் பொறுப்பு, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், அரசமைப்பின் படி தேர்தலை நடத்துவதும் ஆகும்.

புத்தரின்பிறப்பிடமானநேபாளம், இலங்கைக்கு ஒரு தனித்துவமான நட்புநாடாகும். அவ்வாறிருக்கையில் காட்டுமிராண்டித்தனமான செயல்களை இத்தகைய நாட்டில் பொறுத்துக்கொள்ள முடியாது. அரசு நிர்வாகத்தில் காட்டப்பட்ட திறமையின்மையும்இந்தநிலைக்கு இட்டுச்சென்றுள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

சமூகத்தில் இணக்கமாக ஒன்றுகூடி, இணக்கமாக கலந்துரையாடி, இணக்கமாக கலைந்து செல்ல வேண்டும் என புத்தர் போதித்தார். புத்தர் போதித்த ‘சப்த அபரிஹானி தர்மய‘வை நேபாளத்தின் தற்போதைய ஆளும்தரப்பு ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளும்எனநம்புகிறேன்.

# நேபாளத்திற்கான விமான சேவைகளை இடைநிறுத்தியது சிறீலங்கன் நிறுவனம்

இலங்கை விமானசேவை நேபாளத்துக்கான தனது அனைத்து விமான சேவைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக நேற்று புதன்கிழமை அறிவித்தது. காத்மண்டுவில் உள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகஊடகத்தளங்கள்முடக்கப்பட்டமைக்குஎதிர்ப்புத் தெரிவித்து இளைஞர்கள் நடத்திய போராட்டங்கள் காரணமாக நேபாளத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், காத்மண்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த வார தொடக்கத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் பலர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் நேபாளத்தில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில்வசிக்கும்இலங்கையர்கள்அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. எவருக்கும் எவ்வித பாதிப்பும்ஏற்படவில்லைஎனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. காத்மண்டுவில் உள்ள இலங்கை தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தகவலுக்கமைய, நேபாளத்தில் 22 மாணவர்கள், ஏனைய குடியிருப்பாளர்கள் மற்றும் தூதரக ஊழியர்கள் உட்பட 102 இலங்கையர்கள் வசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவில் இருந்து நேபாளத்துக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த 73 இலங்கையர்களை நாட்டுக்குஅழைத்துவருவதற்கானநடவடிக்கைகளையும் வெளிவிவகார அமைச்சு எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உதவி தேவைப்படும் நேபாளத்தில் உள்ள இலங்கையர்கள், இலங்கை தூதரக அதிகாரிகளை +977- 9851048653 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# நாமல் வழக்குத் தாக்கல் செய்யாவிட்டால் நான் அவருக்கு எதிராக வழக்கு போடுவேன்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச எனக்கு எதிராக 14 நாட்களுக்குள் மானநஸ்ட வழக்குத் தாக்கல் செய்யவேண்டும். இல்லையேல் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நான் வழக்குத் தாக்கல் செய்து நட்டஈடு கோருவேன். மானநஸ்ட வழக்கு ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. வழக்குத் தாக்கல் செய்தால் நாமல் ராஜபக்சவிடம் சட்டக் கல்லூரி,தாஜுதீன், லசந்த, ஹெக்னெலிகொட, ஜுலம்பிட்டியே அமரே உள்ளிட்ட பல விடயங்களை குறுக்கு கேள்வியாக கேட்பேன் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டி.வி. சானக அவரது தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச எனக்கு கேள்வி கோரல் பத்திரம் அனுப்பி வைத்துள்ளதாக சபையில் குறிப்பிட்டார். சமூக ஊடகங்கள் பக்கம் சென்றால் கேள்வி கோரல் பத்திரம் பரிமாற்றப்படுகிறது. ஆனால் எனக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித பத்திரமும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

நாமல் ராஜபக்ச எனக்கு எதிரான மானநஸ்ட வழக்கு தாக்கல் செய்யவுள்ளார் என்று குறிப்பிடப்படுகிறது. அவர் நீதிமன்றத்தில் பயிற்சிப் பெறாத காரணத்தால் மானநஸ்டவழக்கின்தன்மையைஅறிந்திருக்கவில்லை. மானநஸ்ட வழக்கின்போது முறைப்பாட்டாளரிடம் பிரதிவாதி எந்தக் கேள்வியையும், கேட்கலாம். ஏனைய வழக்குகளில் இவ்வாறான தன்மை கிடையாது.

குறிப்பாக முறைப்பாட்டாளர்கள் கண்ணாடி அறையில் இருக்கக்கூடாது. கண்ணாடி அறையில் இருக்கும் நபர் என்னிடம் பில்லியன் கணக்கான நிதி கோட்டு கேள்வி கோரல் பத்திரத்தை அனுப்பி வைத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்த வழக்கில் ஒழுக்கம் பிரதான ஒரு அம்சமாக கருதப்படும். அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்பவரின் ஒழுக்கம் கேள்விக்குள்ளாக்கப்படும்.

முறைப்பாட்டாளரின் ஒழுக்கம் தூய்மையானதாக இருத்தல்வேண்டும். கேள்விபத்திரத்தில்முறைப்பாட்டாளர் இங்கிலாந்து சிடி பல்கலைக்கழகத்தில் சட்ட பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. முறைப்பாட்டாளர் எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் அவரிடம் பல குறுக்குக் கேள்விகளை கேட்பேன். இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் அவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

நாமல் ராஜபக்ச எனக்கு எதிரான மானநஸ்ட வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர் நான் அவரிடம் ‘ சட்டக்கல்லூரி பட்டக்கல்வியை தொடர்வதற்கு குறைந்தப்பட்ச தகைமையை பூர்த்தி செய்துள்ளீர்களா, இங்கிலாந்து சிடி பல்கலைக்கழகத்தின் சட்ட பட்டம் உண்மையானதா, சட்டக்கல்லூரியின் இறுதியாண்டு பரீட்சையை தனியறையில் இருந்து எழுதினீர்களா,

தாஜுதீன்,லசந்த, ஹெக்னெலிகொட ஆகிய படுகொலைகளுக்கு தாங்கள் உட்பட தங்களின் குடும்பம் தொடர்புப்பட்டுள்ளதா, ஜுலம்பிட்டியே அமரே தங்களின் (நாமல் ராஜபக்சவின்) மெய்பாதுகாவலரா, நிமல் லன்சா என்பவரை விசேட அதிரடிப்படையினர் பின்தொடர்ந்து வரும்போது தங்களின் தந்தை அவரை பாதுகாப்பதற்கு கட்டிப்பிடித்துக் கொண்டாரா, ‘ என்ற குறுக்கு கேள்விகளை நான் நிச்சயம் கேட்பேன்.

14 நாட்களுக்குள் நாமல் ராஜபக்ச எனக்கு எதிராக மானநஸ்ட வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இல்லையேல் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நான் வழக்குத் தாக்கல் செய்து நட்டஈடு கோருவேன். தயாராகவே இருங்கள் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேபாளம் தரும் எச்சரிக்கை

**நேபாளத்தில் நிகழ்ந்த அரசியல் குழப்பங்களையும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த மக்கள் எழுச்சியும் வன்முறையும் தொலைக்காட்சித் திரைகளில் பார்த்த இலங்கையர்கள், ‘அது நமக்கே நேர்ந்திருக்கலாம்!‘என்று ஆழ்ந்த சுவாசம் விட்டிருப்பர். 2022ஆம் ஆண்டின் அரகலய (Aragalaya) போராட்டங்கள் இலங்கையில் எழுந்தபோதும், அப்போது அரசியல் மாற்றம் ஒழுங்காகவும், சட்டமும் ஒழுங்கும் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் நடந்தது. அந்த தருணத்தில் காவல்துறையும் பாதுகாப்புப் படைகளும் மிதமான முறையில் செயல்பட்டிருந்தது; இல்லையெனில் கொழும்பும் நேபாளம் சந்தித்த அதே நிலையை எதிர்கொண்டிருக்கும்.**

**இலங்கையின் சட்ட அமுலாக்க அமைப்புகளும் பாதுகாப்புப் படைகளும், தங்கள் வரலாற்றுப் பிழைகளும் தோல்விகளும் இருந்தபோதும், அக்காலத்தில் காட்டிய தொழில்முறை ஒழுக்கம் பாராட்டத்தக்கது. அதேசமயம், பிரிவினைகள், அரசியல் பிளவுகள் அதிகமாக இருந்தாலும், மக்கள் பெருந்தொகை அவசரமாக அசம்பாவிதங்களில் சிக்காமல் இருந்தது முக்கியமான சாதனை.**

**ஆனால், நேபாள ஆளும்தரப்பின் வீழ்ச்சி கொழும்பிற்கு ஒரு எச்சரிக்கை மணி. புரட்சிகர இயக்கங்கள் தோல்வியடைந்தால், அரசியல்தலைவர்கள்தங்களது அதிகாரத்தை அடக்குமுறையால் தக்கவைத்துக்கொள்ள முயன்றால் அது எவ்வாறு வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு நேபாளம் தான்.**

**இதிலிருந்து இலங்கை ஆளும்தரப்பு பாடம் கற்க வேண்டியது அவசியம்.**

**நேபாளத்தில் இருந்து வந்த காட்சிகள், இளைஞர்களுக்கும் அரசுக்கும் இடையேயான பிளவை வெளிப்படுத்தியது. சமூக ஊடகத் தடை ஒரு பொறியைப் போல இருந்தாலும், மக்கள் மனதில் பல ஆண்டுகளாக சேர்ந்து கிடந்த விரக்திகளே உண்மையான வெடிபொருள். ஊழல், அதிகார துஷ்பிரயோகம், தண்டனையின்றி ஆட்சி செய்வது ஆகியவை, அந்த வெடிபொருளின் அடிப்படை. ஒரு சிறிய தீப்பொறியே அதை அடக்குமுறைக்கும் குருதிச் சகதிக்கும் இட்டுச் சென்றது.**

**இதையே இலங்கையின் அரகலயவுடனும் பலர் ஒப்பிட்டனர். தொடக்கத்தில் அமைதியாக இருந்த போராட்டங்கள், பின்னர் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டால் வன்முறையாக மாறியது. நேபாளத்திலும் அதே நிகழ்ச்சி நடந்தது. இளைஞர்கள் தங்களது கனவுகளும் ஆசைகளும் நசிக்கப்பட்டதைப் பார்த்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முயன்றனர். நாட்டுக்குள் இருந்தவர்கள், போராட்டம் மூலமாக தங்கள் குரலை வெளிப்படுத்தினர்.**

**இன்று நேபாளம் ஒரு திருப்பத்தில் நிற்கிறது. அங்கு மக்கள் இன்னும் கோபத்தினால் ஊக்கமடைந்து, கூட்ட வன்முறையை நியாயப்படுத்துகின்றனர். இலங்கையில் 2022இல் சில பழிவாங்கும் தாக்குதல்கள் நடந்தன. சிலர் அரசியல் தலைவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் குறியாகினார்கள்.**

**சில இடங்களில் தவறான அடையாளம் காரணமாகவும், தனிப்பட்ட பகைமைகள் காரணமாகவும் தாக்குதல்கள் நடந்தன. ஆனால் அந்த நிகழ்வுகளை ஆழ்ந்து விசாரிக்க இலங்கையிலும் ஆர்வமில்லை. நேபாளத்திலும் அதே நிலையே.**

**இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளவேண்டும்? இலங்கை மீண்டும் அதே பாதையில் சென்றுவிடக்கூடாது. அடுத்தமுறை மக்கள் எழுச்சி ஏற்பட்டால், அது இம்முறையைவிட பல மடங்கு வன்முறையுடனும் அழிவுடனும் அமையும். அதனைச் சமாளிக்க முடியாத நிலையும் உருவாகலாம்.**

**ஆகவே, இந்த ஆளும்தரப்பு மீது பொறுப்பும் கண்காணிப்பும் அதிகரிக்கவேண்டும். ஆட்சி, நல்லாட்சி வழிமுறைகளில் முன்னேறி, ஊழலற்ற, பொறுப்பான, மக்களுக்கு அருகாமையில் இருக்கும் ஆட்சியாக மாற வேண்டியது அவசியம். இல்லை என்றால், நேபாளத்தின் பிம்பம் நாளை நம்மை நிழல்போல் பின்தொடரும் அபாயம் இருக்கிறது.**

**நேபாளம், வங்காளதேசம், இலங்கை – மூன்று நாடுகளின் அனுபவங்களும் ஆசிய ஜனநாயகங்களுக்கு ஒரு பாடமாக நிற்கின்றன. ஜனநாயகத்தை பாதுகாக்க, இளைஞர்களின் குரலுக்கு செவிசாய்க்க, ஊழலுக்கு எதிராக சீர்திருத்தங்களை உடனே மேற்கொள்ள தவறினால், புரட்சிகள், வன்முறைகள், இரத்தப்பாய்ச்சல்கள் தவிர்க்க முடியாதவையாகி விடும்.**

**இலங்கை இன்று ஒப்பீட்டளவில் நிலைத்தன்மையுடன் இருப்பது சந்தர்ப்பவசம். ஆனால், அதில் தங்கி நிற்காமல், நம்பிக்கையளிக்கும் ஆட்சியும் வெளிப்படையான செயல்பாடுகளும் இல்லையெனில் நாளை நம்மை நேபாளம் போல அழிவின் விளிம்பிற்கு தள்ளக்கூடும்.**

# இலங்கை-ஐரோப்பிய ஒன்றியம் இடையே கூட்டாண்மையின் 50 ஆண்டுகள் நிறைவு

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான கூட்டாண்மையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்றுள்ளார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான கூட்டாண்மையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்னிழமை இடம்பெற்ற புகைப்படக் கண்காட்சியிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டார்.

தசாப்தங்களுக்கும் மேலாக ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஒன்றாக உறவுகளை கட்டியெழுப்ப மிகவும் நிலைபேறாகவும் வளமான எதிர்காலத்திற்கானவாய்ப்புகளைஉருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுஅந்தஉறவுகளைமேலும்வலுப்படுத்துமொரு சந்தர்ப்பமாக விவரிக்கலாம். இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் மூலம், நமது நாட்டின் அபிவிருத்திப் பயணத்தை மேலும் துரிதப்படுத்த முடியும் என எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# இன ரீதியாகச் செயற்பட்டவர்களுக்கு உச்ச சிறப்புரிமை கிடைக்கமுடியாது

## சிறீநேசன் எம்.பி. காட்டம்

இலங்கையைசிங்கபூராகமாற்றுவதாககூறிக்கொண்டு சித்திரவதை கூடங்களாகவே மாற்றியுள்ளனர். மிருசுவில் கொலைகள் தொடர்பான குற்றத்துடன் தொடர்புடையவரை முன்னாள் அரசுத் தலைவர் கோதாபய ராஜபக்ச பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். அப்படியென்றால் இனவாத ரீதியிலான செயற்பாடுகளே அளவுக்கு அதிகமாக நடந்துள்ளன. இவ்வாறு செய்தவர்களுக்கு உச்சமான சிறப்புரிமைகளுடனான வாழ்க்கையை அமைப்பதில் சமத்துவம், சம உரிமை இருக்காது. மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புங்கள். அப்போதே நாடு அபிவிருத்தியடையும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் நிறைவேற்று அரசுத் தலைவர் ஆட்சி முறைமையை ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்ததுடன் அவருடன் இதுவரையில் 8 அரசுத் தலைவர்கள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். ஜனநாயக ஆட்சி முறைக்குள் சர்வாதிகாரத்தை புகுதித்திய ஆட்சி முறையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம். இந்த ஆட்சி முறையானது எங்களுக்கு என்ன நன்மை செய்தது. . இந்நிலையில் எங்களை பொறுத்தவரையில் உரித்துரிமைகளை இல்லாமல் செய்வதையும் விட அரசுத் தலைவர் ஆட்சி முறை இருக்கக்கூடாது என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

இப்போது மண்ணை தோண்டும்போது எலும்புகூடுகளை காண்கின்றோம். 230க்கும் மேற்பட்ட எலும்புகூடுகள் செம்மணியில் கண்டு பிடிக்கப்பட்டள்ளன. முனனாள் அரசுத்தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலத்தில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. வடக்கில் மாத்திரமன்றி கிழக்கிலும் இந்த நிலைமை இருந்த்து.

இந்நிலையில் இப்போது மனித புதைகுழிகள் மட்டுமன்றி போதைப் பொருட்களும் குழிகளில் இருந்து மீட்கப்படுகின்றன. இதற்கெல்லாம் அரசுத் தலைவர் ஆட்சி முறையே காரணமாக இருந்துள்ளது. இதனால் இந்த ஆட்சி முறையை முழுமையாக அரசமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடாகும் அதேபோன்று அளவுக்கடந்த சுகபோகங்கள் இவர்களுக்கு இருக்கக்கூடாது என்பதும் எங்களின் நிலைப்படாகும்.

அரசுத் தலைவர்யொருவர் அரசு, ஆளும்தரப்பு, ஆட்சித்துறை மற்றும் ஆயுதப்பட்டையின் தலைவராக இருக்கின்றார். இவ்வளவு தலைமைத்துவத்தை வைத்துக்கொண்டு இந்த நாடு முன்னேற்றமடைந்துள்ளதா? ரீலங்காவை சிங்கபூராக மாற்றப் போவதாக ஜே.ஆர்.ஜயவர்தன கூறியிருந்தார். ஆனால் சித்திரவதை கூடங்கள்தான் இங்கே உருவாக்கப் பட்ட்டுள்ளனவே ஒழிய,சிங்கபூராக மாற்றப்படவில்லை என்பதன அனுபவத்தில் கூறுகின்றோம்.நாட்டில் பல புதைகுழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆட்சியாளர்கள் இதனை செய்துள்ளனர். இப்போது போதைப்பொருட்களும் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படுகின்றன. அரசுத் தலைவர்களாக இருந்தவர்கள் தங்களின் அதிகாரங்களை பயன்படுத்தி இவர்கள் செய்த சேவைகளை விட மக்கள் பட்ட அவஸ்தைகள்தான் அதிகமாக உள்ளன.

உதாரணத்திற்கு மிருசுவில் கொலைகள் தொடர்பான குற்றத்துடன் தொடர்புடையவரை அரசுத் தலைவர்யாக இருந்த கோதாபய ராஜபக்ச பொதுமன்னிப்பில் விடுதலை செய்துள்ளார்.அப்படியென்றால்இனவாதரீதியிலானசெயற்பாடுகளே அளவுக்கு அதிகமாக நடந்துள்ளன. இவ்வாறு செய்தவர்களுக்கு உச்சமான சிறப்புரிமைகளுடனான வாழ்க்கையை அமைப்பதில் சமத்துவம், சம உரிமை இருக்காது.மக்களின்வாழ்வாதாரத்தைகட்டியெழுப்புங்கள். அப்போதே நாடு அபிவிருத்தியடையும் என்றார்.

# பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரமுடியும்

## எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

பிரதிஅமைச்சர்ஒருவருக்குஎதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முடியும். இது வெஸ்ட் மினிஸ்டர் சம்பிரதாயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்த நம்பிக்கையில்லா பிரேரணை ஒழுங்கற்றது என அறிவித்து சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அதனை நிராகரித்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏஸ்கின் மே, கௌவுல் என்ட் சக்தர் (சிஷவிவஷ்ஜள னிழிதீ, லுழிற்யி & றீஜுழிவ-ஜுளஷ) போன்றவற்றில் நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்தும் பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவருவதானது வெஸ்ட் மினிஸ்டர் முறைமையாகும்.

பிரதி அமைச்சர் ஒருவர் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு தரப்பாக மாறும்போது, நிலையியற் கட்டளைகளில் அது குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்திற்காக நம்பிக்கையில்லாப்பிரேரணையைக்கொண்டுவருவதை நிராகரிக்க முடியாது.

நிலையியற் கட்டளைகளில் அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் குறித்து தெளிவான குறிப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனைக் கொண்டு மாத்திரம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது என்று உங்களால் தெரிவிக்க முடியாது

அரசமைப்பின் 46 (1) ஆவது பிரிவின்படி, பிரதி அமைச்சர் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவதால், இதுபோன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவருவது சம்பிரதாயம். இது வெஸ்ட்மின்ஸ்டர் சம்பிரதாயம். குறிப்பாக, அரசமைப்பின் பிரிவு 45(3) இன் கீழ், பரந்த அரசமைப்பு சட்டகத்தின் மூலம் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைகொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது

நாடாளுமன்றநடைமுறைகள்தொடர்பானமுன்னுதாரணங்களை சபாநாயகர் பரிசீலனை செய்திருந்தால், பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியும். சட்டமா அதிபரின் ஆலோசனையையும்செயலாளர்குழுவினால்வழங்கப்பட்ட அறிக்கையையும் இந்த சபையில் சமர்ப்பியுங்கள். இவற்றை பரிசீலித்து எதிர்க்கட்சியின் கருத்தை சபையில் முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# புலம்பெயர்ந்தோரின் நோக்கங்களை நிறைவேற்றவே ஆளும்தரப்பு முயற்சி

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

முன்னாள்அரசுத்தலைவர்மஹிந்தராஜபக்சவை வீட்டை விட்டு வெளியேற்றுவதையும், அவருக்கான பாதுகாப்பை நீக்குவதையும் விடுதலை புலிகளின் புலம்பெயர் அமைப்பாளர்கள் விரும்புவார்கள்.

புலம்பெயர்ந்தோரின் நோக்கத்தை செயற்படுத்தவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. ஆளும்தரப்பின் இந்தச் செயற்பாட்டுக்கு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசுத் தலைவர்களின்உரித்துரிமைகள்(நீக்குதல்)சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பினர்நாடாளுமன்றசிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு எமது குழுத் தலைவர் நாமல் ராஜபக்ச மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கடந்த வாரம்கூட செய்தியாளர் சந்திப்பை நடத்தி நாமல் ராஜபக்சவுக்கும் போதைப்பொருள் வியாபாரத்துக்கும் இடையில் தொடர்பிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்

பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவின் கருத்துக்கு எதிராக நாமல் ராஜபக்ச உரிய சட்ட நடவடிக்கை எடுத்து விளக்கம் கோரி கடிதம் அனுப்பி வைத்துள்ளார். போலியான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்றத்துக்குள் முன்வைப்பவர்கள் வெளியில் சென்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

முன்னாள் அரசுத் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை நீக்குவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. முன்னாள் அரசுத்தலைவர் கோட்டபய ராஜபக்சவின் ஆட்சியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள்கொள்கைஅடிப்படையில்நீக்கப்பட்டன.

நாட்டு மக்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு மறந்துவிட்டது. ஆனால் விடுதலை புலிகள் அமைப்பின் புலம்பெயர் அமைப்புக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உறுதியாக நிறைவேற்றுகிறது.

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவை வீட்டை விட்டு வெளியேற்றுவதையும், அவருக்கான பாதுகாப்பை நீக்குவதையும் விடுதலை புலிகளின் புலம்பெயர் அமைப்பாளர்கள் விரும்புவார்கள். புலம்பெயர்ந்தோரின் நோக்கத்தை செயற்படுத்தவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.ஆளும்தரப்பின் இந்த செயற்பாட்டுக்கு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்றார்.

### முன்னாள் அரசுத் தலைவர்கள் உரித்துக் குறித்த

# சித்ரசிறி குழுவின் அறிக்கையை உடனே பகிரங்கப்படுத்துங்கள்

## தயாசிறி எம்.பி. கோரிக்கை

சித்ரசிறி அறிக்கையின் பிரகாரமே அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகளை நீக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. சித்ரசிறி அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிந்துக்கொள்ள வேண்டும். அறிக்கையை சபைக்கு சமர்ப்பியுங்கள். மக்களின் வரிப்பணத்தில்தான் இந்தக் குழுவும் செயற்பட்டது. ஆகவே அறிக்கையை பகிரங்கப்படுத்துங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இந்தச் சட்டமூலத்தை கொண்டுவந்துள்ளது. மக்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே இந்தச் சட்டமூலத்துக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கப்போவதில்லை.. மக்களுக்கு இல்லாத ஏதும் ஆட்சியாளர்களுக்கு இருக்க கூடாது என்று தேசிய மக்கள் சக்தி தொடக்கத்தில் குறிப்பிட்டது. ஆனால் இன்று அந்த கொள்கை மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை பிறகு குறிப்பிடுகிறேன்.

அரச வாகனத்தை பயன்படுத்த போவதில்லை என்று குறிப்பிட்டீர்கள். ஆனால் அன்று அரச வாகனங்களை அனைவரும் பயன்படுத்துகின்றீர்கள். வீடுகளைப் பெறமாட்டோம் என்றீர்கள். ஆனால் இன்று அனைவரும் வீடுகளை பெற்றுக்கொண்டுள்ளீர்கள். ஒரு சிலர் அமைச்சருக்கான சம்பளத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தையும் பெறுகிறார்கள். பதவிகளுக்கும், நபர்களுக்கும் இடையில் வேறுபாடு மற்றும் பிரத்தியேக மரியாதைகள் உண்டு .இதனை ஆளும்தரப்பு தற்போது விளங்கிக் கொண்டுள்ளது.

சித்ரசிறி அறிக்கையின் பிரகாரமே இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே சித்ரசிறி அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். அறிக்கையை சபைக்கு அளிக்கை செய்யுங்கள். மக்களின் வரிப்பணத்தில்தான் இந்த குழுவும் செயற்பட்டது. ஆகவே அறிக்கையை பகிரங்கப்படுத்துங்கள்.

முன்னாள் அரசுத் தலைவர்கள் நாட்டுக்காக கடுமையான தீர்மானங்களை எடுத்தார்கள். அவர்களை பாதுகாப்பதற்காகவே இவ்வாறான சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. வெறுப்பினை கொண்டு செயற்படாதீர்கள் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## இது ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்சமாகவே இதனைக் குறிப்பிட முடியும். அதிகாரங்களில் உள்ள சிலரும் தமது சிறப்புரிமைகளைப் பெற்று வாழ்கின்றனர். அந்த அரசியல் கலாசாரத்திற்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இருந்த அரசியல் கலாசாரத்தை நாம் நன்கு அறிவோம். அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வ வீடு, வாகன அனுமதிப்பத்திரம், அமைச்சர்களுக்கான சம்பளம் மற்றும் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கானசம்பளம் எரிபொருள் கொடுப்பனவு ஆகியவற்றை நாம் தற்போது குறைத்துள்ளோம்.

இந்த நிலையில் ஓய்வு பெற்றுள்ள அரசுத் தலைவர்களின் உரிமைகள் சட்டத்தின் மூலம் சில சிறப்புரிமைகள் இழக்கப்படுகின்றன. இது அரசியல் கலாசாரத்தின் மாற்றம் என்பதே தவிர பழிவாங்குதல் அல்ல.

இந்தசட்டம்எந்தவிதத்திலும்பாதுகாப்போடு தொடர்புபட்டதல்ல. எவருக்காவது பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்பட்டால் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட குழுவுக்கு விடயங்களை தெரிவித்து தேவையான பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

நாட்டில் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகள் தொடர்பில்நீண்டகாலம்நாம்பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யாவிட்டால் அவற்றை சில மட்டுப்படுத்தலின் கீழ் வழங்குவது தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம். பாதுகாப்புக்கு மேல்திகமாக முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு பணிக்குழு வழங்கப்பட்டிருந்தது. சில சிறப்புரிமைகள் மட்டுப்படுத்தலின்றி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணசிங்க பிரேமதாசவின் மனைவியான ஹேமா பிரேமதாசவும் இந்த சட்டத்தின் கீழ் சிறப்புரிமைகளைப்பெற்றுள்ளார்.அவற்றுக்காக பாரியளவுநிதிசெலவிடப்பட்டுள்ளது. அவருக்கு மேற்படி சட்டத்தின் கீழ் கடந்த வருடத்திலும் பாரிய நிதி வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு 26 லட்சத்து 85ஆயிரத்து 660 ரூபாவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு ஒரு கோடியே 16 இலட்சத்து 66 ஆயிரத்து 348 ரூபாவும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 5 கோடியே 46 லட்சத்து 52 ஆயிரத்து 990 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் அரசுத் தலைவர்களான மைத்திரிபாலசிறிசேனவுக்கு ஒரு கோடியே 50 லட்சத்து 72 ஆயிரத்து 450 ரூபாவும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு கோடியே 2 லட்சத்து 22 ஆயிரத்து 88 ரூபாவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 34 இலட்சத்து 92 ஆயிரத்து 39 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு 9 கோடியே 85 லட்சத்து 88 ஆயிரத்து 39 ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார்.

## வலி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவரும் யாழ்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான சிறீதரன் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் தனிக் கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள், பலாலி இராணுவமுகாம்இராணுவத்தினரின்வருகை மற்றும்எறிகணைத்தாக்குதல்கள்காரணமாக 1990.06.15 அன்று வெள்ளிக்கிழமை தமது சொந்தமண்ணிலிருந்துஇடம்பெயர்ந்தார்கள். இந்த இடப்பெயர்வு நிகழ்ந்து 35 வருடங்கள் கடந்தும். நாட்டில் போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிரம்பிய பின்னரும் இன்றுவரை மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ள அந்த மக்கள், இந்த நாட்டுக்குள்ளேயே இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஏதிலிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

கிட்டத்தட்ட 2700 ஏக்கருக்கும் அதிக விஸ்தீரணமுடைய காணிகளைக் கொண்ட மயிலிட்டி, பலாலி, வசாவிளான்,கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான், தையிட்டி, ஊறணி,தோலகட்டிஉள்ளிட்டபலபேரூர்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளில் குடியேறும்உரிமைபறிக்கப்பட்டவர்களாகவே இன்றும்வாழ்கிறார்கள்,ஆட்சிமாற்றங்கள்,அரசு மாற்றங்களின் பின்னும் அவர்களது மீள்குடியேற்றம் சாத்தியப்படுத்தப்படாமை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரதும், அவர்களது பிள்ளைகளினதும், அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.எனவே யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 13 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் கடந்த 36 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து, இன்றுவரை சொந்த மண்ணில் மீள்குடியேற முடியாது இந்தநாட்டுக்குள்ளேயே ஏதிலிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அறிவாரா?

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், இந்த மக்களுக்குச் சொந்தமான எத்தனை ஏக்கர் காணிகள் இன்றளவும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப் பட்டுள்ளன என்பதையும், குறித்த காணிகள் ஏன் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா? இந்த நாட்டில் போர் முடிவுற்று 10 ஆண்டுகளின் பின்னரும் வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன் என்பதையும்? இதனால் சொந்த மண்ணில் குடியேறி வாழ முடியாதவர்களாக அந்த மக்கள் படும் அவலங்கள் எத்தகையவை என்பதையும் அமைச்சரால் இச்சபைக்கு அறிவிக்க முடியுமா?

புதிய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒருவருடகாலத்தைஅண்மித்துள்ளநிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்குறித்துஅமைச்சர்இச்சபைக்கு அறிவிப்பாரா? இதுவிடயமாக,தங்கள் அமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது சாத்தியமாகும் என்பதை இச்சபையில் பகிரங்கமாக தெரிவிக்க முடியுமா? அத்தகைய நடவடிக்கைகள் எவையேனும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லைஎனின்மேற்குறித்த மீள்குடியேற்றவிடயம்காலதாமதமாவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? எனக்கேள்விகளைஎழுப்பினார்

## நம்பிக்கையில்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாபிரேரணைநிராகரிக்கப்படக் காரணமாகும். அவ்வாறு இல்லை என்றாலும் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் பணியிடத்தில்நேற்றுஇடம்பெற்றசெய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட அநுர ஜயசேகர, தற்போது ஆளும்தரப்பின் பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருந்து வருகிறார். அவர் இந்தப் பதவியில் இருக்கும் நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நேர்மையாக இடம்பெறாது. அதனால் அவரை பிரதி அமைச்சு பதவியில் இருந்து நீக்க வேண்டும் என நாங்கள் ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் ஆளும்தரப்பு அதனை செய்ய தவறியதால், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்தோம்.

நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகருக்கு கையளித்த தினத்தில் இருந்து, இதனை நிராகரிப்பதற்கு ஆளும்தரப்புப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வந்தது. அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நாங்களும் பதிலளித்து வந்தோம். அதேநேரம் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கான காரணங்களை நாங்கள் தெரிவித்திருந்தோம். ஆனால் சபாநாயகர்நம்பிக்கையில்லாபிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என நிராகரிப்பதற்காக தெரிவித்த காரணங்களில் நாங்கள் முன்வைத்த எந்த வாத்துக்கும் பதில் வழங்கிஇருக்கவில்லை. மாறாகசபாநாயகரின் உத்தரவு 3, 4ஆம் வகுப்பு மாணவர்களின் கட்டுரை போன்றே இருந்தது. அவர் அரசியல் தீர்ப்பொன்றையே அறிவித்திருந்தார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பானசாட்சியங்களைமறைத்தார்என்ற காரணத்துக்காகவே பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர தீர்மானித்தோம். என்றாலும் பிரதி அமைச்சர் தொடர்பில் நாங்கள் தெரிவித்து வந்த குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்க முடியாததால் அதனை ஆளும்தரப்புநிராகரித்தது. அவ்வாறு இல்லை என்றால், நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டு அதனை தோற்கடிப்பதற்கான பெரும்பான்மை ஆளும்தரப்பிடம் இருந்தும் அதனை நிராகரிப்பதற்கு எடுத்த தீர்மானத்தின் மூலம் ஆளும்தரப்பு எதனையோ மறைக்க முற்படுகிறது.

குறிப்பாக நம்பிக்கையில்லா பிரேரணையைவிவாதத்துக்குஎடுத்துக்கொண்டால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பல விடயங்கள் வெளியில் வரும். அது மக்கள் மத்தியில் பேசப்படும். விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அரசுத் தலைவருக்கும் நாடாளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டி ஏற்படும் என்று அச்சப்பட்டே ஆளும்தரப்பு நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிக்க தீர்மானித்திருக்கிறது.

இதனைநிராகரிப்பதற்குசபாநாயகருக்கும் பெரும் அழுத்தம் கொடுக்கப்பட்ருக்கிறது. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று இவ்வாறு நிராகரிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். அதனால் சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு பிழையான முன்மாதிரிகளை மேற்கொள்ளாமல் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிப்பணத்தின் ஊடாக மாளிகை கட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். தோல்வியடைந்த தினத்தில் இருந்து எவ்வாறு மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவது என்று சிந்திக்கிறார்கள். அதற்கான வழிமுறைகளை ஆராய்கிறார்கள். இவர்கள் நாட்டின் நலனுக்கு என்ன செய்கிறார்கள்? ஆகவே மக்களின் வரிப்பணத்தில் இவர்களை தொடர்ந்து பராமரிப்பது நியாயமானதா? ஐந்தரை இலட்ச பெறுமதியான காலணி அணியும் மகன்மார்கள் தமது பெற்றோரை பார்த்துக்கொள்ளவேண்டும்என்றுநீதிமற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்புக்கு சபைக்கு முன்வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க அரசுத் தலைவர் உரித்து சட்டத்தை நீக்கும் பொருட்டு இந்தச்சட்டமூலம் ஆக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட நீதியரசரான வீரமந்திரி வழங்கியுள்ள ஒரு தீர்ப்பில் ஆளும்தரப்போ அல்லது அரசுத் தலைவரோ நிர்வாக அதிகாரத்தை மக்களின் பொறுப்பாளராக பயன்படுத்த வேண்டுமே தவிர உரிமையாளராக செயற்படக்கூடாது' என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோல் அந்த அதிகாரம் எச்சந்தர்ப்பத்திலும் மக்களின் பொதுநலனுக்காகவேபயன்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்குஇல்லாதவைஎமக்குவேண்டாம் என்பதை எமது தேர்தல்அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அனைவரும் சட்டத்தின்முன்சமமாக மதிக்கப்படவேண்டும். நாங்களும் இந்த அதிகாரத்தின் தற்காலிக பொறுப்புதாரிகளே.

முன்னாள் அரசுத் தலைவர் ஜே;ஆர்.ஜயவர்தன வாழ்நாள் முழுதும் மக்களின் வரிப்பணத்தில் சுகபோகமாக வாழ்வதற்காகவே 1986ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆகவே இந்தச் சட்டம் அரசமைப்பின் ஒரு பகுதியல்ல. அரசமைப்பின் 36 ஆவது பிரிவில் ஓய்வுப்பெற்ற அரசுத் தலைவர்களின் ஓய்வூதியகொடுப்பனவுதீர்மானிக்கப்படுகிறது. எதிர்வரும்காலங்களில்மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்புதிருத்தத்தின்போதுஇந்தஓய்வூதிய கொடுப்பனவு பற்றி ஆராயலாம்.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பில்தான் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. மக்கள் இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கவில்லை. ஓய்வுப்பெற்றதன் பின்னரும் மக்களின் வரப்பணத்தில் சுகபோகமாக வாழலாம் என்று நினைப்பவர்களுக்கும், அவர்களை தங்கியிருப்பவர்களுக்கும்தான் இந்த சட்டமூலம் எதிரானது. அவர்கள்தான் சட்டமூலத்தை எதிர்க்கிறார்கள். இந்த சட்டத்தை இவர்கள் இதுவரை காலமும் முறைகேடாகவே பயன்படுத்தியுள்ளார்கள்.

தேவையற்ற செலவுகள் இரத்துச் செய்யப்படும் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். மக்களும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க2005.08.31அன்றுஅமைச்சரவை பத்திரம் ஊடாக மாதிவெல பகுதியில் தனக்கு வீடு ஒன்றை நிர்மாணிக்க காணி ஒன்றை ஒதுக்கிக்கொண்டார். இது சட்டத்துக்கு முரணானது என்று ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்தார்கள். இவ்விடயத்தில் 1986ஆம் ஆண்டு அரசுத் தலைவர்களின் உரித்து சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு நீதிமன்றம் அதற்கு இடமளிக்கவில்லை.

அதேபோல் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன சேவையில் இருந்து ஓய்வுப்பெறுவதற்கு முன்னர் இந்த சட்டத்தைப் பயன்படுத்தி மலலசேகர மாவத்தை அரச இல்லத்தை தனக்கு ஒதுக்கிக் கொண்டார். அத்துடன் சேவையில் இருந்து ஓய்வுப்பெற்ற பிரதம நீதியரசருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு தனக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டார். இவரது இந்த முறையற்றசெயற்பாட்டுக்கு உயர்நீதிமன்றம் இடமளிக்கவில்லை.

முன்னாள் அரசுத் தலைவர்கள் இந்தச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி தங்களையும்,தம்மை சார்ந்தோரையும் வளப்படுத்திக் கொண்டார்கள். இதற்கு மக்களின்வரிப்பணமேசெலவழிக்கப்படுகிறது. இதனை மாற்றியமைக்க கூடாதா? இந்தச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தால் மக்களையும் கொன்று உண்பார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளநிலையில்ஏன் இவர்களுக்கு மட்டும் சுகபோகம்?

உலக நாடுகளில் அரசுத் தலைவர்கள் சேவையில் இருந்து ஓய்வுப் பெற்றதன் பின்னர்அவர்கள்நாட்டின்அபிவிருத்திமற்றும் சமூக மேம்பாடுகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். அதற்காகவேஅவர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன். அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு அவர்கள் செயற்படுவார்கள். ஆனால் இலங்கையில் அவ்வாறான நிலை உள்ளதா, இலங்கையின் முன்னாள் அரசுத் தலைவர்கள் தமது மகன்களுக்கு அரச வரிப்பணத்தின் ஊடாக மாளிகை கட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். தோல்வியடைந்த தினத்தில் இருந்து எவ்வாறு மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவது என்று சிந்திக்கிறார்கள். அதற்கான வழிமுறைகளை ஆராய்கிறார்கள். இவர்கள் நாட்டின் நலனுக்கு என்ன செய்கிறார்கள்? ஆகவே மக்களின் வரிப்பணத்தில் இவர்களை தொடர்ந்து பராமரிப்பது நியாயமானதா?

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அரசுத் தலைவர்க்கு கடிதம் எழுதி நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம். மகன்மார்கள் விண்ணுக்கு விண்கலம் ஏவுவதற்கு பணம் இருக்குமாயின், 5 இலட்சம் பெறுமதியில் காலணி அணிவார்களாயின் ஏன் தமது பெற்றோரை பார்த்துக்கொள்ள முடியாது? எதிர்க்கட்சித் தலைவர் மாறுப்பட்ட வகையில் செயற்பட வேண்டும். சிறந்த தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## புலிகளால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிஸ்புல்லாஹ், எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருக்கல் மடம் சம்பவம் தொடர்பில் ஆளும்தரப்பு முழுமையான கவனத்தை செலுத்தியுள்ளது. இதுதொடர்பான வழங்கு 2014 ஆம் ஆண்டு இதுதொடர்பான வழக்கு ஆரம்பிக்கப்பட்டது. அந்த காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பான அலுவகம் இருக்கவில்லை. என்றாலும் இந்த விடயத்தை மீண்டும் வெளியில் கொண்டு வந்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேசமரபுரிமைக்கமைய இந்த அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறும். தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். நீதி அமைச்சிடம் போதிய நிதி உள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட நிபுணர்களின் மதிப்பீட்டுக்கு இணங்க நிதியை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கான நடவடிக்கைகளில் இழப்பீட்டு அலுவலகம் மற்றும் காணாமற் போனோர் அலுவலகம் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளும். அதற்காக தேவைப்படும் அனைத்தையும் பெற்றுக் கொடுப்பதில் ஆளும்தரப்பு ஒரு போதும் பின்னிற்காது.

கைகள் படாத வகையில் பாரிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் நிபுணர்கள் கூறும் எத்தகைய உபகரணங்களையும் பயன்படுத்தி அந்த உடலங்கள் அகழப்பட்டு உரிய சமூகத்தின் முறைப்படி இறுதிக்கிரியைகளை கௌரவத்துடன் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் மதத் தலைவர்களைக் கௌரவிக்கும் வகையில் மத அனுஷ்டானங்களுக்கு இணங்க அந்த இறுதிக் கிரியைகள் நடத்தப்படும். மேற்படி நடவடிக்கைகளில் இரகசியத் தன்மைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் இந்த நடவடிக்கைகள் நீதி நியாயம் பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்படும்.

அந்தவகையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். நடைமுறையில் உள்ள சட்டத்தை பின்பற்றி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேவைப்பட்டால் சர்வதேசத்தின் உதவி ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இக்காலங்களில் மழை பெய்யக் கூடாது என்று நாம் பிரார்த்தித்துக் கொள்வோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளின் வெளிப்படைத் தன்மைக்கு ஆளும்தரப்பே தடை

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை வெளிப்படை தன்மையுடன் முன்னெடுப்பதற்கு ஆளும்தரப்பே தடையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டும். ஆளும்தரப்பு எவ்வாறான தடையை ஏற்படுத்தினாலும் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விடயத்தை கைவிடப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர அப்பதவியிலிருக்கும் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை நியாயமாக முன்னெடுக்க முடியுமா என்ற சந்தேகம் எமக்கு காணப்படுகிறது. இந்த விசாரணைகளின் போது அவர் சாட்சியமளித்திருக்கின்றார். அவருக்கு கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் சாட்சியளித்திருக்கின்றனர். அந்த வகையில் விசாரணைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும் என அவர் எண்ணினால் நிச்சயம் பதவி விலகியிருப்பார்.

ஆனால் அவர் அதை செய்யாததன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாபிரேரணையைமுன்வைத்தன. ஆனால் தற்போது நம்பிக்கையில்லா பிரேரணையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த பக்க சார்பற்ற விசாரணைகளுக்கு ஆளும்தரப்பின் இந்த தீர்மானம் சவாலாக அமைந்துள்ளது. நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் பல உள்ளன. அதற்கமைய பிரதி அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிக்க முடியாது எனக் கூறுகின்றனர். அவ்வாறெனில் அதற்காகவா இந்த ஆளும்தரப்பு ஆட்சியைப் பொறுப்பேற்றது?

உயிர்த்தஞாயிறுதாக்குதல்விசாரணைகளை வெளிப்படை தன்மையுடன் முன்னெடுப்பதற்கு அரசாங்கமே தடையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நாம் இதனை கைவிடப் போவதில்லை. ஆளும்தரப்பின் கூற்றிலுள்ள உண்மையை தன்மையும், அடிப்படையையும் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்தில் பல்வேறு காரணிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன் போது, ஆளும்தரப்பின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கும், உள்ளூராட்சிசபைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கும், கட்சியின் எதிர்கால அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் பரவலாகப் பேசப்படுகிறது. அது அரசியல் ஊடாக பிரசாரமாக முன்னெடுக்கப்படுகிறது. பரிசோதனைகள் இன்றி கொள்கலன்களை விடுவிப்பதற்கு அரசாங்கமே தீர்மானித்தது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்படுவதாகக் கூறப்பட்டது. அதன் பின்னர் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் இது தொடர்பில் பணிப்புரைகளை விடுத்திருந்தார். ஆனால் இதுவரையில் எந்தவொரு முறையானநடவடிக்கையும்எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. இதன் காரணமாகவே போதைப்பொருள் தயாரிப்புக்கான மூலப்பொருள் கொண்ட கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆளும்தரப்பு இதற்கான முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றார்.



# இன்று மடத்தடி ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சிவனாலய கும்பாபிஷேகம்



வரலாற்றுப்பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மருதநில மகாராணி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் பரிவார ஆலயமான சுந்தரேஸ்வரர் சிவன் ஆலயம் இன்று (11) வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) காண்கிறது.

இலங்கை நாட்டில் இருக்கிற ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இருக்கும் ஒரேயோரு சுந்தரேஸ்வரர் ஆலயம் இதுவாகும்.

அம்பாறை மாவட்ட தமிழ் கூறும் மக்களின் கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டின் தனித்துவ அடையாளமாக விளங்கும், 500 வருடங்களுக்கு மேல் வரலாற்றை கொண்ட மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த 06.04. 2022 இல் கோலாகலமாக நடைபெற்றது .

அன்றுஅதிகாலையில்இச்சிவன்ஆலயத்திற்கானஅழகிய சிவலிங்கம் தமிழ் முறைப்படி பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. அன்று 'மரகதம்'எனும் சிறப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மதம் என்பது மனிதனிடத்தில் ஏலவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப்படுத்தல் என்கிறார் வீரத் துறவி சுவாமி விவேகானந்தர் .கடவுள், மதம் மற்றும் ஆன்மிக கருவூலங்களை கைவிடாமல் பிடித்துக் கொண்டிருப்பதால்தான் நம் நாடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றார் அவர் .

ஆம், மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும் வன்னிமையின் சிற்றாட்சி நிலவிய பகுதியில் அமைந்ததுமான மீனாட்சியம்பாள் திருத்தலத்தின் மேற்கே காணப்படுவது இச் சிவன் ஆலயம்.

கிபி 14ஆம் நூற்றாண்டில் சிங்காரபுரியை ராஜதானியாக கொண்டு ஆட்சி செய்த வன்னிய ராஜசிங்கன் என்ற மன்னன் அமைத்தது மீனாட்சியம்மாள் ஆலயமாகும்.

அதேவேளை, அங்கு மேற்கே வயல்வெளி க்கு மத்தியில் இருக்கக்கூடிய புராதன சிவன் ஆலயம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

சோழர் இலங்கையில் பொலநறுவையை மையமாகக் கொண்டு 52 ஆண்டுகள் ஆட்சி இந்த காலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது .

பொலநறுவை ராஜ்யம் என்பது அனுராதபுர இராச்சியத்தை சோழர்கள் கைப்பற்றிய பின்னர் அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இராஜ்ஜியம் ஆகும் .

கிபி 1017 கி.பி. 1236 காலகட்டத்திற்குரிய இக்காலத்தை முதலில் 'மும்முடி சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டது.

இலங்கை நீர்வள நாகரீகத்தின் பொற்காலமாக அதனைக் குறிப்பிடலாம்.

ராஜேந்திர சோழன் இப்பகுதியை ஆட்சி செய்த பொழுது ஜனநாதபுரம் என்றும் அழைக்கப்பட்டது.

அவர்கள் 52 ஆண்டுகள் அங்கு ஆட்சி செய்தார்கள்.

இவர்களது காலத்தில் இலங்கையில் இந்து மதம் நன்றாக பரவியது எனலாம். பொலநறுவையில் உள்ள சிவன் கோயிலும் அதில் ஒன்று. அது இன்றும் இருக்கிறது.அதன் பின்னணியில் சோழர்களால் மடத்தடியில் சிவனாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் 16ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் இலங்கையை ஆக்கிரமித்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர்கள் கிறிஸ்தவமதவெறிகொண்டுசெயல்பட்டதனால் இந்து கோயில்களை அழித்துச் சேதமாக்கினர்.

அதற்குள் மண்டூர் முருகன் ஆலயம் திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் என்பனவும் அடங்கும் . அந்த அடிப்படையில் மடத்தடி சிவனாலயம் அழிக்கப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது .

அதன் பின்னர் அவ் ஆலயம் தூர்ந்து காடு மண்டிக்கிடந்தது. அதைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் ராஜநாகம் குடிகொண்ட பாரிய புற்று இன்றும் உள்ளது. அன்றிருந்த சுனையுமுள்ளது.

அவ்வேளையில் மட்டக்களப்பு ஆதீன ஏற்பாட்டில் தமிழ் மந்திரங்கள் உச்சாடனத்துடன் அங்கு அழகிய சிவலிங்கம் ஒன்று அரோஹரா கோஷம் முழங்க கும்பாபிஷேகமன்று அதிகாலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்தப் பகுதியிலே சிவலிங்க வழிபாடு இடம் பெற்று வந்த காலை, அட்டப்பளத்தைச் சேர்ந்த திருமதி கமலாதேவி விவேகானந்தம் குடும்பத்தினர் அதனை சிவனாலயமாக கட்டியெழுப்ப வேண்டும் என்று எமது பரிபாலன சபையிடம் விடுத்த வேண்டுகோள் நாளை குடமுழுக்கு காண்கின்ற நிலைமைக்கு வந்திருக்கின்றது .

ஒரு பரிவாரக் கோயில் எவ்வாறு ஆகம முறைப்படி அமைய வேண்டுமோ அவ்வாறு மிகுந்த செலவிலே சகல ஐஸ்வர்யங்களையும் கொண்டு சகல சிறப்புக்களையும் கொண்டு இந்த சிவனாலயம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது .

இந்த ஆலயத்துக்கு தேவையான களஞ்சிய அறை மின்சாரம் தண்ணீர் வசதி உள்ளிட்ட அத்தனை வசதிகளையும் அவர்களே தாமாக மனப்பூர்வமாக முன்வந்து செய்தமை இவ்வண் ஈண்டு குறிப்பிடத்தக்கது .

ஆலய முகப்பில் மேல் தளத்தில் ஆறு அடி உயர அழகிய சிவன் சிலை நிறுவப்பட்டுள்ளது.சைவத்தைக் காத்த சமயகுரவர்கள் நால்வர் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ,மணிவாசகர் ஆகியோரது சிலைகள் அந்த மண்டபத்தில் உள்ளே நிறுவப்பட்டிருக்கின்மை மற்றும் ஓர் சிறப்பம்சமாகும்.

மத்தியிலே சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது .பின்புறம் பாணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றது.

மொத்தத்திலே தென்றல் வீசுகின்ற மனோரம்யமான வயலும் வயல் சார்ந்த நெய்தல் நிலத்திலே சுற்றவர களனிகள் நிறைந்த பிரதேசத்தில் இவ் ஆலயம் நாளை குடமுழுக்கு காண்பது என்பது சிறப்பானதாகும் .ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில் மற்றும் ஆலோசகர் வித்தகர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் பரிபாலன சபையினரின் ஒத்துழைப்பில் இவ் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகிறது.

கும்பாபிஷேக கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் ஆலோசனையில் கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ இரத்தின மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மா முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்ற சமகாலத்திலே அதுவும் சுந்தரேஸ்வரர், பிரியாவிடை, மீனாட்சி அம்பாள் சகிதம் தினமும் அங்கு திருவிழாக்கள் இடம் பெற்று வருகின்ற வேளையிலே, இங்கு சுந்தரேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகம் காண்பது உண்மையிலே சிறப்பானதாகும் .

அட்டப்பளத்தைச் சேர்ந்த பரோபகாரி ஆன்மீகச் செம்மல் திருமதி கமலாதேவி விவேகானந்தம் கொடுத்து வைத்தவர். வரலாற்றில் தனி முத்திரை பதிக்க அம்பாள் அவருக்கு அருள் புரிந்துள்ளார்.

அவரது புத்திரி திருமதி அகந்தினி எனது மாணவி. அவரது துணைவர் திரு.ரஞ்சன் ஆகியோரெல்லாம் பாக்கியம் செய்தவர்கள். அவர்கள்

இரவு பகல் பாராமல் இந்த பணியிலே முழுமூச்சாக நின்று செயற்பட்டதனால் இன்று அவ் அழகிய ஆலயம் குடமுழுக்கு காண்கிறது.

ஆலயத்தின் சமகால ஆலோசகர் என்ற வகையிலே அவர்கள் என்னை அடிக்கடி தொடர்பு கொண்டு அத்தனை செயற்பாடுகளையும் கேட்டுக்கேட்டு கலந்துரையாடி செய்திருந்தார்கள்.

அவர்களுக்கு எம்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு, இக் குடமுழுக்கு வைபவம் சீரும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா-JP.
( Rtd.ADE & senior Journalist)
Sp.trd(SC) , B.A, P.G.D.E(Merit) ,M.Ed.. கௌரவ ஆலோசகர்,
மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்












# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2025இல் வெளியிடப்பெற்றது